# மத்திய அரசின் ஆலோசனையின் பின்பே அகதிகள்


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | ஆனி 20 | துல்கஜ் 21 | இதழ் 143

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 4-7-1991


# வெளியேற்றம்

(சென்னை)

தமிழ்நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவது தொடர்பாக மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசு கலந்தாலோசித்த பின்னர் முடிவு எடுக்கப்படும்.

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் மோதல்

# இரு ராணுவம் பலி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் ஏற்பட்ட கடும் மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், நாலு விடுதலைப்

(4ம் பக்கம் பார்க்க)

## மேலதிக படைகள் விரைவு

(சென்னை)

தமிழக கடற்கரைப்பகுதியின் பாதுகாப்பை அதிகரிக்குமுகமாக மேலதிக படையினரை அனுப்பிவைக்க மத்திய அரசு உறுதியளித்திருப்பதாக தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## ★ இலங்கையில்

# அடுத்த நூறு நாட்களுக்குள்

# அரசு - புலிகள் ஒப்பந்தம்?

## புரன்ட்லைன் தகவல்

(சென்னை)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னையை தீர்க்குமுகமாக அடுத்த நூறு நாட்களுக்குள் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகும் சாத்தியம் இருப்பதாக இந்திய பிரபல சஞ்சிகையான 'புரன்ட்லைன்' தெரிவித்துள்ளது.

இதுபற்றி சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்; சமாதான தீர்வு தொடர்பாக இலங்கை அரசிடம் ஓர் சமாதான திட்டம் உள்ளது. இத்திட்டத்தின்படி நூறு நாட்களுக்குள் வடக்கு - கிழக்கிற்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் பற்றி பேசி முடிவு செய்து ஒப்பந்தம் ஒன்று எழுதப்பட்டு அதில் இலங்கை அரசும் புலிகளும் கையொப்பமிட வேண்டும்.

மேலும் இத்திட்டத்தின்படி இலங்கையரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மாத்திரமே நேரடியாக பேச்சுவார்த்தைகள் நடைபெறும். புலிகள் கோரிவந்தது போல் இப்பேச்சுக்களிலோ அல்லது ஒப்பந்தத்திலோ ஏனைய தமிழ் கட்சிகளோ, குழுக்களோ

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பிரச்னை

# விரைவில் தீரும்

(கம்புறுப்பிட்டி)

வடக்கு - கிழக்கு பிரச்னையை ஜனாதிபதி மிகவிரைவில் தீர்த்து வைப்பாரென பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கம்புறுப்பிட்டியில் இடம்பெற்ற 'கம்உதாவ' வைபவ இறுதிநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான உதவிகளை

# பிரிட்டன் நிறுத்தியுள்ளது

(லண்டன்)

இலங்கைக்கான இராணுவ, பொருளாதார உதவிகளை தற்காலிகமாக நிறுத்துவதென பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது. இதுபற்றி பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதர் ஜெனரல் சேபால ஆட்டிகல நேற்றுக் காலை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைக்கப்பட்டு, தனது முடிவை பிரிட்டிஷ் அரசு தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சேபால இலங்கை விரைவு; பிரட்மன் மௌனம்

(லண்டன்)

இலங்கைக்கான உதவிகளை பிரிட்டிஷ் அரசு நிறுத்தியுள்ளதையடுத்து பிரிட்டனுக்கான இலங்கைத் தூதர் ஜெனரல் சேபால ஆட்டிகல இலங்கைக்கு விரைந்துள்ளதாக பி. பி. ஸி. ஆங்கில செய்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவாக

# தடகள விளையாட்டு விழா ஒழுங்கு விதிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படும் தியாகி திலீபனின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான தடகள விளையாட்டு விழா பற்றிய ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

விளையாட்டு விழா பற்றிய ஒழுங்கு விதிகள் வருமாறு:

(1) வட்டவை மட்டங்களில் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பொறுப்பாளரின் பொறுப்புக்களும், கடமைகளும் அவ் வட்டவையின் பிரதேசச் செயலகத்தை அலுவலக முகவரியாகக்கொண்டு செயற்படுதல்

(2ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு பாஸ் வழங்க

# கொழும்பில் ராணுவம் மறுப்பு

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்புக்கு இலக்கான பின்னர் வடபகுதிக்கு உணவுப் பொருட்களையோ, அத்தியாவசிய பொருட்களையோ, எடுத்துச் செல்வதற்கு இதுவரை எவருக்கும் கூட்டுப்பணியகம் அனுமதிவழங்கவில்லை.

வர்த்தகர்கள் அனுமதி கோரி கூட்டுப்பணியகத்துக்கு சென்றால் "நோ பாஸ் யவ்னு" என அதிகாரிகள் வெறுப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலையில் கவசவாகனங்கள் சகிதம் ரோந்து சென்ற ஸ்ரீலங்காப் படையினர் வீதியால் சென்றுகொண்டிருந்த இரு தமிழரை சுட்டுக்கொலை செய்துள்ளனர். க)

## உலர் உணவு விநியோகம்

# நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜூலை மாதத்திற்குரிய உலர் உணவுவிநியோகம் நாளை 5ம்திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இடம் பெயர்ந்த குடும்பங்கள் அவர்களுடைய வருமானம் 1,500 ரூபாவுக்கு குறைவாக இருக்குமிடத்து அவர்கள்முகாமிலிருந்தாலும் சரி முகாமை விட்டு வெளியிலிருந்தாலும்

(4ம் பக்கம் பார்க்க)

## ★ அண்டை நாடுகளில் ஏற்படும்

# எந்த சிக்கலையும் சமாளிக்க

# இந்திய ராணுவம் தயார்!

(புதுடில்லி)

இந்தியாவைச் சுற்றியுள்ள எந்தவொரு அண்டை நாடும் இதுவரை தீர்க்கப்படாமலிருக்கும் பிரச்னைகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துவைக்க முன்வரவேண்டும். அவ்விதம் செய்யத்தவறினால் அதனால் ஏற்படும் எந்தவொரு சிக்கலையும் எதிர்கொள்வதற்கு இந்திய இராணுவம் தயாராகவே உள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஒத்துமாறல்

கொழும்பில் கடமையாற்றும் பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒத்துமாற விரும்புகிறார். தொடர்புமுகவரி: தர்சிகா ரேடர்ஸ், கந்தசாமி கோவில் முன்பு, கண்டி வீதி, கிளிநொச்சி. [1417]

### புலமைப் பரிசில் (ஆண்டு- 5)

புதிய கல்வி நிலையத்தால் வெளியிடப்பட்ட 8 வினாத் தாள்களைக்கொண்ட மாதிரிப் பயிற்சி விற்பனைக்குண்டு. விலை ரூபா 35-00. ஆண்டு 5 Paper Class ஆரம்பமாகியுள்ளது. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4935)

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

கல்வித் தடை, விவாகத் தடை, தொழில் பிரச்சனை, கடன் தொல்லைகள் தீர உங்கள் சாதகத்தை ஆராய்ந்து பலன் கூறுவோம். நிவாரணம் பெற ஆலோசனைகளும், யந்திரங்களும் வழங்குகிறோம். பலன் தவறினால் பணம் திருப்பிப் பெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, டருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். (சி- 4929]

## சவூதியில் கைது

(றியாட்)

சவூதி அரேபியாவில் 'ஹஜ்' யாத்திரையை மேற்கொண்டு இலங்கையிலிருந்து சென்ற முஸ்லிம் யாத்திரிகர் 5 பேர் கைது செய்யப்பட்டு சவூதி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தனியார் வாகனமொன்றில் சவூதி சட்டத்தை மீறிச் சென்றதாலேயே கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக அறிய வருகிறது. (பூ)

## மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் திரு. முத்துக்குமாரசாமி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## தியாகி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்ப்பகுதிகளில் விளையாட்டுக்களின் தரம் உயர்த்தலின் பொருட்டும் மக்களின் உடல்நலம் பாதுகாக்கப்படுதலின் பொருட்டும் கிராமங்களின் அடிமட்டத்தில் உள்ள மக்களும் போட்டிகளில் பங்குபற்றும் வகையில் சகல நடவடிக்கையினையும் எடுத்தல். இதற்காக ஏற்கனவே உள்ள விளையாட்டுக்கழகங்களை சனசமூக நிலையங்களை நாடலாம்.

வட்டவை மட்டத்திலான போடிகள் நடாத்தப்படும் போது ஏற்படும் செலவீனங்களுக்கு பற்றுச்சீட்டுப் பெற்று வைத்திருந்து மாவட்டமட்டப் போட்டிகளுக்கு முன்னதாக அவற்றைச் சமர்ப்பித்தல். (போட்டிகளுக்கு வரையறுத்த செலவீனம் வழங்கப்படும்)

போட்டிகளைநடாத்தி முடித்தலின் பொருட்டு வேண்டிய உதவிகளை பிரதேசப்பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். போட்டிகளின் போது நடுநிலைமைக்கு வேண்டிவர்களை விளையாட்டுப் பொறுப்பாளர் தனது நம்பிக்கைக்குரியவர்களை சேவைக்கு அழைக்கலாம்.

முதற் கட்டப் போட்டிகள் முடிவடைந்ததும், இதில் முதலாம். இரண்டாம் இடங்களைப் பெறும் வீர, வீராங்கனைகளின் விண்ணப்பப்படிவங்களில் விளையாட்டுப் பொறுப்பாளரின் பகுதி பூர்த்தியாக்கப்பட்டு அவை மாவட்டப் போட்டிகளுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டிகளில் வீர, வீராங்கனைகளின் திறமைகள்(நேரம், நீளம், உயரம் என்பன) செவ்வனே பதிவு செய்யப்பட்டுக் கோவை ஒன்று தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட கால இடைவெளிகளைச் செவ்வனே பயன்படுத்திப் போட்டிகளைநடாத்தி மாவட்டக் குழுவிற்கு ஒத்துழைத்தல்.

0 வட்டவை மட்டத்திலான விண்ணப்ப முடிவு திகதி: 10-07-1991.

0 வட்டவை மட்டத்திற்கு நடாத்தி முடிக்க வேண்டிய கடைசி நாள்: 10-08-1991

0 மாவட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்ற விண்ணப்பங்களை ஒப்படைத்தலின் கடைசி நாள்: 15-08-1991.

0 மாவட்டப் போட்டிகள் திலீபனின் தியாகப்போர் தொடங்கிய கால எல்லைக்கு முன்னதாக நடாத்தி முடிக்கப்படும்,

0 மாவட்ட மட்டத்திற்கு மட்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31-07-91 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படுதல்வேண்டும்,

விளையாட்டுப் பொறுப்பாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய போட்டி விதிகள்: வட்டவை மட்டப்போட்டிகளில் இருந்து தனிநபர் வெற்றியாளர்கள் நிர்ணயிக்கவேண்டும்.

1-ம், 2-ம், 3-ம் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு 5, 3, 1 எனப் புள்ளிகள் வழங்கி அவர்களின் தனித்தனி புள்ளிகள் கூட்டப்பட்டு அதிக புள்ளியினை அல்லது புள்ளிகளைப் பெறும் வீரருக்கு 'தனிநபர் வெற்றியாளர் கிண்ணம்'' வழங்கப்படுதல் வேண்டும். இது ஆண்-பெண்களுக்குத் தனித்தனியே அமையும்.

மாவட்டமட்டப் போட்டிகளின் போது தனிநபர் புள்ளிகள் வட்டவைக்கே வழங்கப்படும். இதன் மூலம் விளையாட்டுக்களில் சிறந்த வட்டவை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படும்.

ஆண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்டவை,

பெண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்டவை.

மாவட்டத்தில் சிறந்த வட்டவை. என்பன நிர்ணயிக்கப்படுவதுடன்

தட நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண் மெய் வல்லுனர்

கள நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண் மெய்வல்லுனர்

தட நிகழ்ச்சிகளில் சிறந்த பெண்மெய்வல்லுனர்

கள நிகழ்ச்சிகளில் சிறந்த மெய்வல்லுனர் (பெண்)

போட்டிகளில் சிறந்த மெய்வல்லுனர்.

போன்ற விருதுகள் போட்டியாளர்களின் திறமையினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்;

மாவட்டப் போட்டிகளின் போது ஒவ்வொரு வட்டவையும் ஒவ்வொரு அஞ்சல் ஓட்டக்குழுக்களின் தயார்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். அஞ்சல் ஓட்டம் தனிநபர் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையில் சேராது எனினும் 7, 5, 3, எனப்புள்ளிகளைப்பெறும் ஒருவர் அஞ்சலோட்டம் வேக நடை தவிர்ந்த மூன்றுநிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலாம். மாவட்டப் போட்டிகளுக்கு மட்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள சைக்கிள் ஓட்டம், மரதன் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபெறும் ஒருவர் வட்டவை மட்டப்போட்டிகளிலும் பங்கு கொள்கிறார் எனின் தனித்தனி விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

[தொடரும்)

## இராசி பலன்

04- 07- 1991

வியாழக்கிழமை

ஸப்தமி பி. ப. 4-11 வரை. உத்தரட்டாதி நள்ளிரவு 12-36 வரை.

சித்தயோகம்.

இராகுகாலம் பகல் 1-27 முதல் 2-37 வரை.

சுபநேரம் காலை 7-27 முதல் 8-57 வரை.

மேஷம்: மனவேதனை, தொழில் போட்டி, இனசன பகை.

இடபம்; புதிய ஸ்தானம், காரிய சித்தி, நண்பர்கள் உதவி.

மிதுனம்: கடித உறவு, மாமியார் தொல்லை, கடன் வசூல்.

கடகம்: வீட்டில் துன்பம், அந்நியர் பகை, அவமதிப்பு,

சிங்கம்: உடல் உபாதை, தொழில் தகராறு, மனச் சுமை.

கன்னி; சிறுவிபத்து, மனைவியால் துயர், யோசனை.

துலாம்; வீட்டில் மகிழ்ச்சி, விருந்து வைபவம், புகழ்.

விருச்சிகம்: சொத்து தகராறு, குடும்பபிரிவு, கடன்.

தனுசு: மனவிகாரம், தொழில் பாதிப்பு, குடும்ப கவலை.

மகரம்: மனைமாற்றம், அதிகாரிகள் பாராட்டு, காரிய சித்தி

கும்பம்: பொருள் தவறுதல், கருத்து முரண்பாடு, பணியாள் தகராறு.

மீனம்: வேண்டாத பிரச்சனை, அந்நியவாசம், தொழில் நஷ்டம்.

ஜோஸ்யர்-

## படப்பிடிப்பாளர் கைது

(சென்னை)

திரு. ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக விசாரணை செய்துவரும் சிறப்புப் புலனாய்வுக்குழுவினர் நேற்று முன்தினம் சென்னையில் மற்றுமொரு நபரைக் கைது செய்துள்ளனர்.

உள்ளூர் பத்திரிகைகளுக்கும் வெளிநாட்டுபத்திரிகைகட்கும் செய்திப் படங்களை விநியோகம் செய்யும் சுபா சுந்தரம் என்னும் புகைப்படப்பிடிப்பாளரே கைதுசெய்யப்பட்டவராவார். (பூ)

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சரவணை நாகேஸ்வரி வித்தியாலய மாணவிகளான ச. சசிகுமாரி, ச. சசிகாந் ஆகியோரின் மாணவ உணவு முத்திரைகள் தாவடியை சேர்ந்த பா. சுவந்தர் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியலாயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (க)

## துரைசாமியை விடுவிக்கமுயற்சி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில்தனித்தனிச் சம்பவங்களில் கடத்திச் செல்லப்பட்ட இந்திய எண்ணைவள ஆய்வு அதிகாரி துரைசாமியையும்மற்றும்இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகளையும் விடுவிக்கும் முயற்சியில் தீவிரவாதிகளுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

திரு. துரைசாமியைப் பாதுகாப்பாக விடுவிக்க அரசு அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் பேச்சு நடாத்திவருகிறார்கள். [பூ]

வியாப்பாரம்பெருக விளம்பரம் செய்க

## தனியார் கல்வி நிறுவன ஒன்றிய விசேட பொதுக்கூட்டம்

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 5-7-91 (வெள்ளி) காலை 9 மணி

நிகழ்ச்சிநிரல்:

- யாப்பை அங்கீகரித்தல்
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- வி. பு. ம. மு. உறுப்பினர்களின் சிறப்புரை


முக்கிய விடயங்கள் அறிவிக்கப்பட இருப்பதனால் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனமடம், தீவகம், காரைநகர் ஆகிய கோட்ட சகல பொதுச்சபை அங்கத்தவர்களையும் வருகைதருமாறு அழைக்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[சி 4938)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 | 06 | 1973 ★-★



உதிர்வு: 19 | 06 | 1990 ★-★

திதி: 07-07-1991

### செல்வன் கந்தையா நந்தபாலன்

(ராசா, சுருளி)

பதினாறு வயதினிலெ பள்ளி செல்லும் வேளையிலே
போரழைப்புக் கேட்டுப் புறப்பட்டாய் மண்மீட்க
வீரத் தமிழ் இளைஞர் வேங்கைகளோடி ணைந்து
கோட்டை பிடிக்குங் கொடுஞ் சமரில் பங்கேற்று
கோட்டை பிடித்த பெருவெற்றி விழாக் காணுமுன்
வீரப்புண் ணேந்தி வீரசொர்க்கம் நீயடைந்தாய்!
ஓராண்டுப் போரில் ஒழிந்த தையா உன்கடமை
அன்பின் திருஉருவாய் அகத்தின் குலவிளக்காய்
பண்பின் உறைவிடமாய்ப் பாரினில் இனியவனாய்
இன்ப எளிலுருவாய் இதயம் நிறைந்த நந்தா;
ஆண்டுபல சென்றாலும் அகலாது உன்நினைவு
ஆண்டவன் அடிநிழலில் ஆராத பேரின்பம்
வேண்டி யுன தான்மா சாந்தியுற வேண்டுகிறோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

நெடுந்தீவைத் தாயகமாகவும், கிளிநொச்சி-ஸ்கந்தபுரத்தையும், யாழ். திருநெல்வேலியையும் வதிவிடமாகவும் கொண்ட எமது அன்பு மைந்தன் நந்தபாலனின் இறுதிக்கிரியைகளிலும் பின்னைய ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் சமுகந்தந்து பல வழிகளிலும் பேருதவி வழங்கி ஆறுதலளித்த அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றி!

07-07-1991 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் [ஸ்கந்தபுரம்] நிகழும் ஓராண்டு நிறைவு அஞ்சலிப் பூஜையிலும் அனைவரையும் சமுகந் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. வ. கந்தையா
காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர்.

இல: 33, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

(சி 4904)

பண்டத்தரிப்பு காலையடி

# அருள்மிகு ஞானவேலாயுத சுவாமி

தேவஸ்தான நூதனப்பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக

# சிறப்பு மலர்

## காலையடி வேலவர் ஊஞ்சலிலிருந்து

இன்னிசைத்தண் டமிழ்ப்புலவோர் பாடி யாட
இனியமொழித் திருந்திழையள் இயைந்து பாட
நன்மலர்வே தியர்சொரிந்து பாதம் சூட
ஞானியர்தம் உளத்திருத்தி நயந்து கூட
என்னதவம் இங்குபிறந் திடநாம் செய்தோம்
என்றுவழி படுவோர்கண் ணீரிலாடக்
கன்னலென நெல்விளையும் கழனி சூழ்ந்த
காலையடி வேலவரே ஆடீர் ஊஞ்சல்.

பண்டிதர் அ. ஆறுமுகம்



பணிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள்

## திருப்பள்ளி எழுச்சி நூலில் இருந்து

வாழிஉன் மலரடி வாழிஎம் தாயே
எழில்நகை காட்டிட எழுந்தருள் வாயே
தாழிருஞ் சடையோன் நாயகி நீயே
தாயெனத் தனையரைக் காத்திடு வாயே
வாழ்வு வளம்பெற வழியருள் பணிப்புல
பதியினில் எழில்மிகு கோயில் கொண்டாயே
நாழிகை யாயிற்று நாமுனை வணங்க
நாயகி பள்ளி எழுந்தருளாயே.

வித்துவான் சு. சின்னத்தம்பி

# வினைதீர்க்கும் வேலவன்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன். இவன் கலியுக வரதன். கண் கண்ட தெய்வம். ஈழத்தின் பல பாகங்களிலும் விளங்கும் நூற்றுக்கணக்கான முருகன் திருக்கோவில்களில் காலையடிப் பதியும் ஒன்றுகும் இது யாழ்ப்பாணத்தின் வடமேற்கே சங்கானை மேற்கூரின் ஒரு பகுதியாக பண்டத்தரிப்புக்கு அருகே உள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தைச் சிறப்பித்து நடாத்தியோருள் முன்னுள் நவாலி விதானையார் பரராசசிங்கம், அவரது சகோதரர், திரு. மு. இராமுப்பிள்ளைமுதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தெல்லிப்பழை திரு. சபாபதி வேலுப்பிள்ளை அவர்கள் இடும்பனை ஸ்தாபித்த பெரியாராவர்.

அழிவெய்தியிருந்த இவ்வாலயத்தை திரு. இ. க. காசிநாதன் அவர்கள் 1934-ம் ஆண்டளவில் புதுப்பித்து நித்திய நைமித்தியபூசைகளையும், கந்தபுராணபடன விரிவுரைகளையும் நியமம் தவறுது செய்வித்தார். சுழிபுரம்-குடியிருப்பு அந்தணப் பெரியார்கள் பூசை உரிமைகளைப் பெற்றனர். பணிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் தன் அருமைப் புதல்வன் வேலவனை நாடி, ஆண்டுதோறும் வேட்டைத் திருவிழா, மானம்பூ திருவிழா என்பவற்றுக்கு இங்கு வருவது வழக்கம். இடைக்காலத்தில் மறைந்த பெரியார் அமரர் பொலிஸ் விசுவலிங்கம் அவர்கள் இவ்வாலய வளர்ச்சிக்கு அருந்துணை புரிந்தார்.

நாவலர் பெருமான்குறிப்பிடும் யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாச்சாரம் இவ்வாலயத்தில் தழைத்தோங்கியது. அந்நாளில் முதன்மைபெற்ற கந்தபுராண உரையாசிரியர் பலர் ஆலயமண்டபத்தில் கூடியிருப்பதும் இசைவல்லாளர் செய்யுள் படிப்பதும், உரையாசிரியர் உரை கூறுவதும் பக்தர்களின் உள்ளத்தைத் தொடும் நிகழ்ச்சியாகும். அவ்வகையில்

இவ்வாலயத்தோடு இணைந்து புகழ் பூத்த பெருமை உடையோர் உரையாசிரியர்கள் யோகி கார்த்திகேசு அவர்கள் பண்டிதர் செ. நடராசா அவர்கள் வீரகத்தியார் அவர்கள் ஆவர்.

1967ம் ஆண்டில் திரு. காசிநாதன் தனி உடமையாக விளங்கிய இவ்வாலயத்தைப் பொது உடைமையாக மாற்றினுர் அவ்வாண்டில் அவர் எழுதிய உறுதி சாதனப்படி இவ்வாலயமும் அதற்குரிய நிலப்பகுதியும் ஒரு தருமகர்த்தா சபையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1984ம் ஆண்டில் தேவஸ்தான பரிபாலன சபையினர் விநாயகப் பெருமானுக்கு சிறு ஆலயம் அமைத்து குடமுழுக்குச் செய்தனர். அதன் பின்னர் 1986ம் ஆண்டில் அவன் அருளால் முருகப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று ஆலய கட்டிடத் திருப்பணிகள் நடைபெற்றன. இதன் பேருக ஞான வேலாயுதப் பெருமான் மூலவராகவும் விநாயகப் பெருமான் ஸ்ரீமகாலட்சுமி, பைரவப்பெருமான், இடும்பன் பரிவார மூர்த்திகளாகவும் விளங்க இவர்களுக்குத் தனித்தனி ஆகம முறைப்படி கலை அம்சம் பொருந்திய விமானம் (ஸ்தூபி) கர்ப்பக்கிரகம், மண்டபங்கள் கட்டப்பெற்றுள்ளன.

இப்பணிகளுக்கு ஊர்மக்களும் முருகன் அடியார்களும் பலலட்சம் ரூபாய் வாரி வழங்கினர். அம்மை அப்பன் திருவருளால் இன்று ஞான வேலாயுத சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நடைபெறுகின்றது. இதனைத்தொடர்ந்து அபிஷேகங்கள், மண்டலாபிஷேகம், அன்னதானம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அன்பர்கள் இந்நிகழ்ச்சிகளில்பங்குபற்றி ஞானவேலாயுதன் திருவருள் பெற்றுய்வார்களாக.

புலவர் கா. வேல்முருகன்

## வாழ்த்துரை

'முருகா முருகா சரணம் சரணம்'' என்று ஒலி எழுப்பவேண்டிய நாட்கள் இந்த நாட்கள். அச்சமும், அவலமும் நிறைந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அமைதியின்றி அலைகிறுர்கள். ''தெய்வமும் உண்டு கொல்; தெய்வமும் உண்டு கொல்;'' என்ற கேள்வியும் இடையிடையே எழுப்பப்படுகிறது,

எமது சைவத் திருக்கோயில்களில் திருப்பணிகளும் கும்பாபிஷேகமும் குறைவின்றி நடைபெற்று மக்கள் மத்தியில் சைவ எழுச்சியும் ஏற்படுகிறது. எவ்விதத் தாக்குதலுக்கும், எதிர்ப்புகளுக்கும் இடையிலும் வீறுநடைபோட்டு எழுந்து நிற்கும் எங்கள் சைவம் இன்று கிழக்கே அவுஸ்திரேலியா தொடக்கம் மேற்கே அமெரிக்கா வரை பரந்து விரிந்து காணப்படுகிறது.

திருக்கோயில்களைச் செப்பனிடுவது; கும்பாபிஷேகம் செய்வது போன்ற அருள் நிகழ்ச்சிகள் இன்று பல இடங்களில் நல்லபடி நடைபெறுவதை நோக்கும் போது நெருக்கடியில் தான் ஞானம் பிறக்கும் என்ற உண்மை புலப்படுகிறது.

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமிக்குக் குடமுழுக்கு நடைபெறப்போவதை அறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன். புலவர் வேல்முருகன் உள்ளிட்ட சபையினரின் அயரா முயற்சியினுல் இவ்வைபவம் சிறக்க இடமேற்பட்டது. எனவே கலியுகவரதன் கதிர்வேற் பெருமான் திருவடிகளை இறைஞ்சி அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

—செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

## எங்கள் பிரார்த்தனை

காலையடி அருள்மிகு ஞான வேலாயுத சுவாமி நூதனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் சிறந்தோங்க முருகப் பெருமானின் தாமரைபுரையும் காமர் சேவடியைப் போற்றி வாழ்த்துகின்றேம்.

முருகன் அடியார்கள்
(மலர் வெளியீட்டாளர்)

★

மலர் அமைப்பு:
நா. மா. கந்தசாமி
பண்டத்தரிப்பு நிருபர்

## நன்றி

★ முருகன் திருக்கோவில், பரிவார மூர்த்திகளின் திருக்கோவில்கள் என்பன புதிதாக அமைக்க வேண்டியளவு நிதி உதவியவர்கள்.
★ அந்தணப் பெரியார்கள், ஸ்தபசிகள், சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள், ஓவியர்.
★ பணிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர்.
★ பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தினர்.
★ காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினர்.
★ மஹாகும்பாபிஷேகம், ஏனைய அபிஷேகங்களைக் கொண்டுநடத்தும் முருகன் அடியார்கள்.
★ உடல் உழைப்பு நல்கும் உத்தம அன்பர்கள்.
★ எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்பெயரை வெளியிடாது இச்சிறப்பு மலர் வெளிவரத் துணைபுரிந்த முருக பக்தர்கள், விடயதானம் செய்த சான்றோர்.

அனைவருக்கும் எம் உளம் கனிந்த நன்றி.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

காலையடி அருள்மிகு ஞானவேலாயுத
சுவாமி தேவஸ்தான
—பரிபாலான சபையினர்.

● கொழும்பு பல்கலைக்கழக ——

## உபவேந்தர் பீரிஸுக்கு

# கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிசுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதையடுத்து அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தினுள் எழுந்த சில பிரச்னைகளையடுத்தே இவ்வாறானதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கலாமென பொலிசார் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக உதவிப்பதிவாளரிடம் சென்ற விஞ்ஞான பீட மாணவர்கள் சிலர் உபவேந்தரின் நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், அவர் பல்கலைக்கழகத்திற்கு ஹெலிமூலம் வரமுடியாது. வீதியாலே வரவேண்டும். அதற்கேற்ப அவர் நடந்துகொள்ள வேண்டுமென கூறியதாகவும் பொலிசாரிடப் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாம். [சி]

## புலனாய்வு துறையின்

# கண்டுபிடிப்பு இது!

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமையகம் மீது நடாத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலுக்கான வெடிகுண்டு மருந்து யாழ்ப்பாணத்திலிருந்து 2 வாரங்களுக்கு முன் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டதாக புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டைத்தயாரிக்கபயன்படுத்தப்பட்ட 'ஜெலிக்னைற்' வெடிமருந்து ரவிசங்கர் எனப்படுபவரால் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும் வெள்ளவத்தையில் வீடு ஒன்றில் வைக்கப்பட்டு பின் அங்கிருந்து இரத்மலானைக்கு கொண்டுசெல்லப்பட்டு வெடிகுண்டு தயாரிக்கப்பட்டதாகவும் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. (சி,

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மக்களின் உள்-வெளி இடப்பெயர்வும்' விளைவுகளு'ம் என்றதலைப்பிலான கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழகப் புவியியல் விரிவுரை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட புவியியல்துறை விரிவுரையாளர்கா.குகபாலன் மேற்படி கருத்தரங்கில் உரையாற்றுகிறார். (153)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களின் பிரதிநிதிகள் தமது குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்றை நாளை 5ம்திகதி காலை 9-00 மணிக்கு கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் காரியாலயத்தில் ஏற்பாடு செய்துள்ளனர். மேற்படி கூட்டத்தில் சகல முகாம்களிலும் இருந்து 02 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவேண்டும் என கோரப்படுகிறது.

## மத்திய அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன் தமிழ்நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள், அருகிலுள்ள காவல்நிலையங்களுக்கு சென்று தங்கள் பெயர், விபரங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு பதிவுசெய்துகொள்ளத் தவறுபவர்களை வெளியேற்றுவது தொடர்பாக மத்திய அரசாங்கத்துடன் தமிழ்நாடு அரசு கலந்தாலோசித்த பின்னரே முடிவு எடுக்கப்படுமென்று தெரிவித்தார்

மேலும் இலங்கைத்தமிழர் பிரச்சனையில் மாநில' மத்திய அரசுகள் இரண்டுமே அக்கறை கொண்டுள்ளன வென்றும் இலங்கைத் தமிழர் விடயத்தில் இருநாடுகளுமே சம்பந்தப்பட்ட பிரச்சனை இதுவென்றும் இதனைக் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## வடபகுதிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன் தெரிவித்துவருகின்றனர்.

இதேவேளையில் சிலர் போலியான பாஸ்களை அச்சிட்டு பொருட்களை எடுத்துச் செல்கையில் பிடிபட்டதையடுத்து பலவியாபாரிகள் இராணுவத்தினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

பிடிபட்ட லொறிகள் அநுராதபுரத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான பாஸ்களை அச்சிட்டு விற்பனை செய்த எண்மரை இராணுவ உளவறியும் பிரிவு அநுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றுள்ளது. (எஸ்)

## அண்டை நாடுகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

இந்தியாவின் எல்லைப்புறங்களில் உள்ள இந்திய இராணுவ அதிகாரிகள், வீரர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

பாகிஸ்தான், சீனா உட்பட அண்டை நாடுகளுடன் நல்லுறவுகளை வைத்துக்கொள்ளவே இந்தியா விரும்புகிறது.

பஞ்சாப், காஷ்மீர் ஆகிய பகுதிகளில் பிரச்னைகளை ஏற்படுத்துவதற்கு பாகிஸ்தான் மேற்கொண்டவரும் தொடர்ச்சியான முயற்சிகள் இந்தியாவை பெரிதும் பாதித்துவருகின்றன.

## உலர் உணவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரி மூன்று வார விநியோகம் செய்யப்படவிருக்கிறது.

இவர்களுக்கு இரண்டு வாரங்களுக்கான உலர் உணவு விநியோகத்தை ஒரே முறையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, தொழிலை இழந்தவர்களுக்கு இலவசமாக ஒருவார உலர் உணவு இம்மாதத்திற்குள் விநியோகிக்கப்படவிருக்கிறது. 1,500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய 'உ' அட்டையுடையவர்களுக்கான ஒரு வாரத்திற்கானபொருட்கள் பணத்திற்கு வழங்கப்படவிருக்கிறது.

இம்மாதம் 10ம் திகதியிலிருந்து 'அ', 'உ, அட்டையுடையவர்களுக்கானவிநியோகம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (153)

## இலங்கைக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளாஸ்ரோன் இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டதன் எதிரொலியாகவே பிரிட்டன் தனது 2-வது கட்ட எதிர்ப்பை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதன்படி; இலங்கைக்கான புதிய பிரிட்டிஷ் தூதர் ஒருவர் நியமிக்கப்பட்டால், அவர் பதவியேற்றபின் இலங்கையின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை பொறுத்தே மேற்படி தடை நீக்கம் பற்றி மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி பிரிட்டிஷ் வெளியுறவு துணை அமைச்சர் மேலும் ஜெனரல் ஆட்டிகலவிடம் கூறுகையில்; இனிமேல் இலங்கைக்கு வழங்கப்போகும் சகல உதவிகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கான இராணுவ தளபாட விற்பனையில் புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளது, பிரிட்டனிலிருந்து எதுவித நல்லெண்ண தூதுக்குழுவும் (பிரிட்டிஷ் கடற்படையின் கலை, கலாசார பிரிவுட்பட்) இலங்கைக்கு செல்லாது.

மேலும் இலங்கை ஜனாதிபதிக்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு.ஜோன்மேஜர்எழுதியுள்ள கடிதத்தில்; டேவிட் கிளஸ்ரோனின் வெளியேற்றம் ஒரு தலைப்பட்சமானதும் அர்த்தமற்றதுமாகும். உள்நாட்டு அரசியலில் அவரின் தலையீடு பற்றிய குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமுடியாததொன்றாகும்.

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரை திருப்பி அழைக்குமாறு தாம் கேட்கப் போவதில்லையென்றும் கூடிய விரைவில் பிரிட்டிஷ் தூதர் இலங்கையில் நியமிக்கப்பட வேண்டுமென தாம் விரும்புவதாகவும் தமது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு பிரிட்டன் வருடம் தோறும் 13 மில்லியன் பவுண்களை உதவியாக வழங்கி வருகிறது கடந்த அக்டோபர் மாதம் இலங்கையில் ஏற்பட்ட மோசமான மனித உரிமை மீறல்களால் 3 மில்லியன் பவுண் கடனுதவி நிறுத்தப்பட்டது. (சி)

## இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

இதேவேளை இத்திட்டத்தின்படி, அரசியல் குறிக்கோள்களை அடைவதற்கு வன்முறை வழிகளை நாடமாட்டோம். வன்முறையை கைவிடுவோம் என விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், 1987ல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் மாகாண சபைக்கு வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்ட அதிகாரத்திலும்விடச் சற்று அதிகமாக உள்ளது மேலும் பிரச்சனை தீர, கூட்டாட்சி (வடக்கு-கிழக்கு இணைந்த) பற்றி இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இத்திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாசா பெரிதும் வரவேற்பதாகவும் 'புரன்ட்லைன்' குறிப்பிட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் இலங்கை அரசு முன்வைக்கும் எந்தத் திட்டமும் மேற்படி திட்டத்தின் அடிப்படையிலேயே அமையும்.

ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுவார்த்தையை நடத்துவதில் ஆர்வமாய் இருக்கிறார். ஆனால் அவர் விதிக்கும் முன்நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக் குறியாகவே இருப்பதாகவும் 'புரன்ட்லைன்' தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தைத் தயாரித்தது யார் எனக் கட்டுரையில் குறிப்பிடப்படாத போதும், இதனை அமைச்சர் தொண்டமானே தயாரித்ததாகக் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பரிசீலிப்பதற்கு ஏற்கனவே இது விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும், எனினும் ராஜீவின் கொலையால் அரசுக்கும்-புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சு ஆரம்பிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாதுபோய்விட்டதாகவும் கூறப்படுகிறது [சி]

## மன்னாரில்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

புலிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 10-30 மணிக்கு, மன்னார் மாவட்டத்திலுள்ள ஒலித்தொடுவாய் பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புக்குச் செல்லும்போது விடுதலைப் புலிகளை எதிர்பாராதவிதமாக சந்தித்ததில், இரு பகுதியினருக்கு மிடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கா: பரிது. 2-ம் லெப். காளி, பரமேஸ், வதன் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [வி]

## சேபால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

இவர் தமக்கு பிரிட்டிஷ் வெளியுறவுத் துணை அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும், எச்சரிக்கைகளையும் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கவுள்ளார்

இதேவேளை பிரிட்டனின் இந்த நடவடிக்கை குறித்து ஜெனரல் ஆட்டிகலயோ, இலங்கையில் பிரட்மன் வீரக்கோனோ அல்லது வேறு அரசு அதிகாரிகளோ கருத்துக்கூற மறுத்துவிட்டதாகவும் பி. பி. ஸி: உறியது. (சி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; மக்களுக்கு வாக்குறுதி அளித்தது போல் ஜனாதிபதி இந்திய இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றினார், அதுபோன்று வடக்கு கிழக்கு பிரச்னையையும் அவர் விரைவில் தீர்ப்பார் என்றார். (சி)

## 2ம் ஆண்டு

# நினைவஞ்சலி



**மாட்டின் செல்லையா**

(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு: 13-2-1915 இறப்பு: 04-7-1989

இறைவன் இவர் மூலம் வழங்கிய சகல நன்மைகளையும் நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

சென் அன்ரனிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.

(சி-4942)

# மரண அறிவித்தல்

**அ. சுவாம்பிள்ளை**

(இளைப்பாறிய ஆசிரியர்)

அ. சுவாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனியாபிள்ளை, றெஜினா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறில் சுவாம்பிள்ளை, திருமதி சரோஜினி நிக்கலஸ் (கனடா) மேன்மைதகு திருகோணமலை, மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி கைபித்தாம்பிள்ளை திரு. அ. ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: அ. ஞானப்பிரகாசம்

25, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4941)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81